1994 மார்ச் 22]

சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்'' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. சின்னசாமி அவர்களால் முன்மொழியப்பட்ட தீர்மானம் அவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

(மேசையைத் தட்டும் ஒலி)

நாளை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பேரவைக்கு நிதி நிலை அறிக்கை அளிக்க இருக்கிறார்கள். காலை 10-00 மணிக்கு அளிப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், கேள்வி நேரம் பற்றிய தீர்மானத்தை முன்மொழியக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு நிதியமைச்சர்.

பிற்பகல் 2.10

6. அரசினர் தீர்மானம்

விதி 32-ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 23-3-1994 அன்று தளர்த்தி அந்த நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்''

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது,

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க.
மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.
மறுப்போரே இல்லை.
தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (23-3-1994) காலை 10.00 மணிக்கு கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2.11 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.